

திருவாசகம் - 22
கோவில் திருப்பதிகம் கதைவடிவில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# கோவில் திருப்பதிகம் கதை வடிவில்

## அறுபோக இலக்கணம்

## தில்லையில் அருளியது

**மாறிநின்றென்னை மயங்கிடும் வஞ்சப்**

**புலனைந்தின் வழியடைத் தமுதே**

**ஊறிநின்றென்னுள் எழுபரஞ்சோதி**

**உள்ளவா காணவந்தருளாய்**

**தேறலின் தெளிவே சிவபெருமானே**

**திருப்பெருந்துறையுறை சிவனே**

**ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த**

**இன்பமே என்னுடை அன்பே. 01**

கதிரேசன் சொல்விட்டு ஆச்சிரமத்திற்குச் சென்றுவிட்டார். ஆனால் கவிதாவின் மனம் தடுமாறிக் கொண்டிருந்தது. சில சமயங்களில் நம்பிக்கை ஏற்பட்டாலும், பல சமயங்களில் அந்த நம்பிக்கை சந்தேகத்தைக் கொடுத்தது. பலர் உயிருக்குயிராகக் காதலிப்பர். பின் ஏதோ காரணங்களால் பிரிவர். அவளது தாயினது கூடப்பிறந்த சகோதரன் வேலை செய்யும் இடத்தில் ஒரு பெண்ணைத் தீவிரமாகக் காதலித்து வீட்டாருக்குத் தெரியாமல் அழைத்து வந்துவிட்டார். ஒரு வருடம் கழிய அவள் அவரைவிட்டுப் பிரிந்து தாய்வீட்டுக்குச் சென்றுவிட்டாள். பின்பு அவள் இன்னொருவனைத் திருமணம் செய்து கொண்டாள். அவளது மாமன் ஒரு பிள்ளையோடு பெருந் துன்பப்படுகிறார். இப்படிப் பல சம்பவங்கள் நடைபெறுகின்றன. அதை நினைக்க அவளுக்குத் தலை சுற்றியது. மாலைவரை அதைப்பற்றியே யோசித்துக் கொண்டிருந்தாள். இரவு ஆச்சிரமத்தில் இருந்து வந்த கதிரேசன் அவளது துயரமான நிலையைக் கண்டுவிட்டுக் கேட்டார்; “காலையில் உற்சாகமாக இருந்த நீ இப்போது துன்பப்படுவதாக எனக்குத் தெரிகிறது”

“ஓம் தாத்தா, மாணிக்கவாசக சுவாமிதான் எனது நம்பிக்கைக்கும், நம்பிக்கையீனத்துக்கும் காரணமானவர். அவர், “இம்மை, மறுமையாகிய இரு உலகங்களும் இந்திரியங்களால் நுகரப்படுபவை. ஆகையால் அவை நிலையற்றவை. பரம்பொருள் இந்திரிய நுகர்ச்சிக்கு அப்பாற்பட்டது. அதன் நித்தியமாகிய ஆனந்தம் சுவர்க்க போகத்திலும் மேலானது என்றும் கூறுகிறார். ஐம்புலன்களும் மாறி மாறிப் புதிய எண்ணங்களைக் கொடுப்பதால் அதன் வழியை அடைந்து விடு என்றும் சொல்கிறார். மகேசன் இன்றைய நிலையின் என்னை ஏதோ ஒரு காரணத்துக்காக ஏற்றுவிட்டுச் சில காலஞ் செல்ல இந்திரியங்களின் மாறுபட்ட நினைவால் மனம்மாறினால் எனது வாழ்வு நரகமாகிவிடும். அதனால் என்னுள்ளத்தில் எழுந்து சுடர்விடும் சிவப் பேரொளியோடு எனது காலத்தைக் கழித்தாலென்ன என்ற நினைவு வந்து என்னைத் துன்பப்படுத்துகிறது” என்றாள் கவிதா.

“கவிதா, உலகின் நிலைபேறில்லாத் தன்மையை மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அதுபோலச் சிவனின் உண்மைத் தன்மையையும் சொல்கிறார். நாம் தேவையானவற்றை எடுத்து அதில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். சிவனை நம்பியபின் ஐயம் கொள்வது கூடாது. நம்பிக்கைதான் வாழ்க்கை. அந்த நம்பிக்கை பொய்த்தால் நரகம்தான். ஆனால் சிவன்மீது கொள்ளும் நம்பிக்கை ஏனையவற்றை நீக்கும் தன்மையது. இது எனது அனுபவம்” என்றார் கதிரேசன்.

**அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை**

**ஆனந்த மாய்க் கசிந்துருக**

**என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்**

**யானிதற் கிலனொர் கைம்மாறு**

**முன்புமாய்ப் பின்னும் முழுதுமாய்ப்**

**பரந்த முத்தனே முடிவிலா முதலே**

**தென்பெருந்துறையாய் சிவபெருமானே**

**சீருடைச் சிவபுரத்தரைசே. 02**

“கவிதா, அன்பினால் சிவனை நினைத்து உயிரும் உடலும் கசிந்து உருகினால் அப்படி உருகும் சிவபக்தனை யமனால் கூட எதுவும் செய்து விட முடியாது. இது புராணக் கதை. ஆனால் அது போன்ற கதைகள் பல ஊரில்

இப்போதும் நடைபெறுகின்றன. எனது பிறந்த சாதகத்தை எழுதிய சோதிடர் எனக்கு நாற்பது வயது வரை தான் ஆயுள் என்றவர். அதற்குப் பின்பு எனது மனைவி அந்தப் பயத்தால் எல்லாச் சோதிடர்களிடமும் எனது சாதகத்தைக் காட்டிக் கேட்டபோது சிலர் அற்ப ஆயுள் என்றனர். இது எனது மனைவிக்குப் பெருங் கவலையைக் கொடுத்தது. சோதிடர்கள் கடவுளர் அல்ல ஒருவனது செயல்களைத் தீர்மானிப்பவது சிவன். சிவன் எனக்கு நாற்பது வயது வரை தான் ஆயுள் என்றால் அதை மாற்ற முடியுமா..? என்று எனது மனைவியைக் கேட்டேன். நான் சிவனை முழுமையாக நம்பிச் சிவசேவை செய்பவன். எனது தந்தையான சிவனின் விருப்பப்படி நடக்கட்டுமென்று சிவநினைவாகவே இருந்தேன். ஒருமுறை இமயமலையிலிருந்து மூன்று யோகிகள் ஆச்சிரமத்திற்கு வந்தனர். ஒருவர் என்னைப் பார்த்துவிட்டுச், "சிவயோகியோ நீ நூறாண்டுகாலம் சிவனுக்குச் சேவை செய்வாய்" என்றார். இப்போ எனக்குத் தொண்ணூறு வயது. நம்புவாயா…? என்று கேட்டார் கதிரேசன்.

கவிதா எதுவும் சொல்லாததால் அவரே சொன்னார்; நன்றும் தீதும் மாறி மாறி இரவு பகல்போல ஒருவனின் வாழ்வில் வரும் போகும். சமைக்கும்போது சேலையில் தீபிடித்து ஒரு பெண் இறந்து போனாள். அதற்காகச் சமைக்காமல் விட முடியுமா…? சென்றவாரம் வீதி விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். அதற்காகப் பிரயாணம் செய்யாதிருக்க முடியுமா…? எல்லாம் இயல்பானவை. நல்லவற்றை ஏற்பதுபோலத் தீயவற்றையும் மகிழ்வுடன் ஏற்பவன் தான் சிவனடியான். அதனால் நாளைக்கு இன்னது நடக்கும் என்று போலிச் சோதிடர்கள் போல எதிர்வு கூறாதே. ஒரு செயலைச் சிவனிடம் ஒப்படைத்தால் அதை அவரின் பொறுப்பில் விட்டுவிட வேண்டும். பின் தான் தலையிட்டால் அது மாறுபாடாகத்தான் நடைபெறும்" என்றார் கதிரேசன்.

**அரைசனே அன்பர்க் கடியனே னுடைய**

**அப்பனே ஆவியோ டாக்கை**

**புரைபுரை கனியப் புகுந்துநின்றுருக்கிப்**

**பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே**

**திரைபொரா மன்னும் அமுதத் தெண்கடலே**

**திருப்பெருந்துறையுறை சிவனே**

**உரையுணர் விறந்துநின்றுணர்வதோர் உணர்வே**

**யானுன்னை உரைக்குமா றுணர்த்தே. 03**

“கவிதா, சிவஒளியானது பிரபஞ்சத்துக்குரிய இருளுக்கும் வெளிச்சத்துக்கும் அப்பாற்பட்டது. சிவன் அசைவற்ற பேரானந்தப் பெரும்பொருள். அந்தக்கரணத்தோடு சம்பந்தப்படாத பேருணர்வுதான் பிரக்ஞானமாகும். மெய்ப்பொருளான சிவம் தூண்டாத விளக்கு. அதுபோல அணையாத விளக்கு. இயற்கைப் பொருட்களுள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், தீ, மின்னல் என்பன ஒளிர்வன. இருப்பினும் அவையும் அழியக்கூடியன. மெய்ப்பொருளான சிவனில் இருந்து வெளிப்படும் ஒளிதான் அழிவில்லாதது. பிரகாசமானது. பூரணமானது. அது பரமானந்தமானது. அது நிறைவானது. அதனால் அதை அடைபவன் அழிந்து போக மாட்டான். அவன் சிவனது திருவடியை அடைந்து நித்திய இன்பம் பெறுபவனாகிறான். சிவமிருக்கப் பயமில்லை என்பார்கள். சிவநினைவு தீயவற்றை விலக்கி நல்லவற்றை மேம்படுத்தும். நம்புபவர்களுக்குத்தான் அது விளங்கும். நம்பபாதவர்களுக்கு அது எப்படி விளங்க முடியும். நீ முதலில் நம்புகிறாய். பின்பு அந்த நம்பிக்கையை இழக்கிறாய். அதனால்தான் பல்வேறுபட்ட சிந்தனைகள் உன் மனதில் உருவாகின்றன. நான் உனக்குச் சொல்லலாம். நம்பிக்கையையும் உருவாக்கலாம். அந்த நம்பிக்கை கிடைக்க வேண்டுமானால் நம்பிக்கை கொள்ள வேண்டும். சொல்வதற்கும் செய்வதற்கும் வேறுபாடுகள் பல உண்டு. எதையும் சொல்லி விடலாம். செய்து முடிக்க முடியுமா…? செய்து முடிக்க வேண்டுமானால் செய்து முடிப்பேன் என்று முதலில் நம்ப வேண்டும். மகேசன் பின்நாளில் மாறிவிடுவான் என்று நினைப்பது இப்போதே நம்பிக்கையின்மையை வெளிப்படுத்துகிறது. அதனால் உனக்கு முழுமையான நம்பிக்கை வந்தபின் சொல்” என்றார் கதிரேசன்.

**உணர்ந்த மாமுனிவர் உம்பரோ டொழிந்தார்**

**உணர்வுக்குந் தெரிவரும் பொருளே**

**இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே**

**எனைப் பிறப் பறுக்கும் எம்மருந்தே**

**திணிந்ததோர் இருளில் தெளிந்ததூவெளியே**

**திருப்பெருந்துறையுறை சிவனே**

**குணங்கள் தாமில்லா இன்பமே உன்னைக்**

**குறுகினேற் கினியென்ன குறையே. 04**

“கவிதா, சிவன் ஒருவரே கடவுள். எல்லா உயிர்களுள்ளும் அவர் மறைந்திருக்கிறார். எல்லாச் செயல்களிலும் அவரது ஈடுபாடு உண்டு. சிவன்

மூலப்பொருளாக இருக்கும்பொழுது அவர் ஒருவர். அவருக்கு ஒப்பான பொருள் இல்லை. அவர் பிரபஞ்சமாக விகாரப்படும்போது எண்ணிறைந்த பல கோடிப் பொருட்களாகவும் உயிர்களாகவும் அவர் காட்சியளிக்கிறார். முகம் பார்க்கும் கண்ணாடி முழுமையாக இருக்கும்போது ஒரு முகத்தைத் தெளிவாகக் காட்டும். அது பல துண்டுகளாக உடைந்தால் ஒவ்வொரு துண்டும் பார்க்கும் முகத்தைத் தனித்தனியாகக் காட்டும். இதுதான் மூலப்பொருளுக்கும் பிரபஞ்சப் பொருளுக்கும் உள்ள வித்தியாசம்".

"நிறைஞானிகளும், தேவர்களும் சிவனை முழுமையாக அறிய முடியாதவர்கள். ஒப்பிடுவதற்கு அவனைப்போல இன்னொரு பொருள் இல்லை. உயிர்களுக்கெல்லாம் அவன் உயிர். எனக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பை அறியும்போது நான் முத்தி பெறுகிறேன். பிரளய இருளிலும் அவன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஞானஒளி. அவன் குணாதீதன். அவனை அறிபவன் பூரணமாகிறான்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அவனை அறிய வேண்டுமானால் அவனில் நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும் இங்கு பலர் வணங்குகின்றனர். பூசைகள் செய்கின்றனர். செய்யும்போது பண்டைமாற்று வியாபாரம் போலப் பேரம் பேசுகின்றனர். அப்பேரம் வெற்றியளிக்காவிட்டால் நம்பிக்கை அற்றுப்போகிறது. இதுதான் உனக்கும் நடந்தது. இவ்வளவு காலமும் சிவனை நம்பிய நீ இப்போது நம்பப் பயப்பிடுகிறாய். அந்தப் பயம் உன்னை அன்னியப்படுத்திவிட்டது. அதனால் தான் நடக்கக்கூடாதவற்றை நினைக்கிறாய். நம்பியிருந்தால் நல்லது நடக்கும் என்று நினைத்திருப்பாய்" என்றார் கதிரேசன்".

**குறைவிலா நிறைவே கோதிலா அமுதே**
**ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே**
**மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தேன்**
**மனத்திடை மன்னிய மன்னே**
**சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப்பாயும்**
**திருப்பெருந்துறையுறை சிவனே**
**இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்**
**இனியுன்னை யென்னிரக் கேனே. 05**

"தாத்தா, சிவன் குறைவில்லாத நிறைவானவன். சொற்களால் வர்ணிக்கமுடியாத அமுதானவன். மறைபொருளாக வந்து உள்ளத்தில் உறையும்

மன்னவன். அப்படியான சிவன் என்னுள்ளத்தில் வந்து அமர்ந்து கொண்டான். இனி உன்னிடம் இரந்து பெறத் தக்கது எதுவும் இல்லை. பூரணண் ஆகிய நீ என்னுள் நிறைந்துள்ளாய். அதனால் உன்னிடம் வேண்ட வேண்டிய தேவையில்லை" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அவரும் சிவனைப் போன்ற பூரணர். அதனால் அப்படிச் சொல்கிறார். பூச்சியமான நான் அப்படிச் சொல்லமுடியுமா?" என்று கேட்டாள் கவிதா.

கவிதா, பூச்சியம் தான் பூரணமாகும். இது பலருக்குத் தெரிவதில்லை. எதுவும் இல்லாதது பூச்சியம். எல்லாம் உள்ளதும் பூச்சியம். எல்லாவற்றுக்கும் காரணம் மனம். பூசலார் மனதில் கோவில் கட்டியது போல் யார் மனக்கோட்டை கட்டி அதில் சிவனை இருத்துகிறார்களோ அவர்கள் பாக்கியவாலிகள். நீ இவ்வளவு நாளும் சிவனை முழுமையாக நம்பியவள் என்று நினைத்தேன். ஆனால் நீ சிறு சிறு விடயங்களில் சிவனை நம்பியதால் தான் பெரும் விடயங்களில் நம்பிக்கை உண்டாகவில்லை. பெரிய விடயங்களில் சிவனில் நம்பிக்கை வைக்காதவர்கள் அவற்றைத் தாம் செய்வோம் என்று தன்னில் நம்பிக்கை வைக்கின்றனர். இது சிவனைப் பூரணன் என்று நினைக்காத நிலை. பூரணன் என்று நினைத்தால் அவனிடம் கேட்கத் தேவை இல்லை. தேவையானது கேட்காமலே கிடைக்கும்" என்றார் கதிரேசன்.

**இரந்திரந் துருக என்மனத் துள்ளே**

**ஏகின்ற சோதியே இமையோர்**

**சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடிவாய்**

**திருப்பெருந்துறையுறை சிவனே**

**நிரந்தஆகாயம் நீர்நிலம் தீகால்**

**ஆயவை அல்லையாய் ஆங்கே**

**கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்**

**கண்ணுறங் கண்டுகொண்டின்றே** **06**

"கவிதா, தினமும் இரந்து இரந்து வணங்க வணங்க அவள் உள்ளத்துள்ப் புகுந்து ஒளிர்வான். பொறிகளில் பொறிபவன் அவன். ஐம்பூதங்களைக் கொண்ட உலகமானவன் அவன். அத்துடன் அதற்கு அப்பாலும் இருப்பவன். இதை உணர்பவர்கள் தான் சிவனடியார்கள். முன்பு மகாலிங்கம் குடித்து விட்டு சிவ நிந்தனை செய்வான்.

அதனால் பல துன்பங்கள் வந்தன. அதனால் அவன் சிவபக்தனாக நடித்தான். பகலில் கோவிலில் தொண்டு செய்வான். இரவில் குடித்து விட்டு படுத்து விடுவான். இது யாருக்கும் தெரியாது என்றே அவன் நினைத்தான். ஆனால் இது ஊரவர் எட்டுப் பேருக்குத் தெரியும். அதன்பின் அவன் தமிழ்நாட்டில் உள்ள சிவன் கோவில்களுக்கெல்லாம் சென்று சிவனை வணங்கித் திருந்திய போதும் அவன் திருந்திவிட்டான் என்று யாரும் நம்பவில்லை. இதுதான் உனது நிலையும். ஒருவர் எவ்வளவிற்குப் போற்றுகின்றாரோ அவ்வளவிற்கு அவன் உள்ளத்தில் இருந்து உதவுவான். பொறிகள் எல்லாவற்றிலும் பொறிக்குள் பொறியாய் அவன் இருப்பான். ஐம்பூதங்கள் தான் அவனது உடல் அதற்கு அப்பாலும் இருப்பவன். அதனால் தான் அவன் அனைத்தையும் அறிந்து கொள்கிறான். இது படித்தவர்களுக்குக் கூடத் தெரிவதில்லை. இரகசியமாக யாருக்கும் தெரியாமல் செய்தாலும் அவனருளால் அது தெரியவரும். உனக்கு நடந்தது நான் சொல்லு முன்பே மகேசனுக்குத் தெரியும். அவன் உன்னைப் பற்றி விசாரித்தபோது உனது ஊரவர் ஒருவர் அதைப் பற்றிக் கூறியிருக்கிறார். அது தெரிந்த பின்பு தான் அவன் உன்னை விரும்பியவன். அதனால் நீ நம்பிக்கையை இழக்கத் தேவையும் இல்லை. பயப்படவும் வேண்டியதில்லை. சிவனை நம்பு. அவன விதியை மாற்றியமைப்பவள். தன்னை நம்பியவர்களைக் கைவிடாதவன்" என்றார் கதிரேசன்.

**இன்றெனக் கருளி இருள்கடிந்துள்ளக்**

**தெழுகின்ற ஞாயிறே போன்று**

**நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்**

**நீயலால் பிறிது மற்றின்மை**

**சென்றுசென்றுணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாம்**

**திருப்பெருந்துறையுறை சிவனே**

**ஒன்றும் நீயல்லை அன்றியொன் றில்லை**

**யாருன்னை அறியகிற்பாரே** **07**

"கதிரேசன் மனக்குழப்பத்துடன் ஆச்சிரமத்திற்கு வந்தார். வந்து ஆச்சிரமத்தில் இருந்த சிவனுக்குத் தான் கட்டி வந்த மாலையைப் போட்டார். "இறைவா, மாணிக்கவாசகர் கூறுவது போல எனது மனத்தில் உள்ள இருளைப் போக்குவதற்காக மனதுள் சூரியனாக நீ இருக்கிறாய். என் நினைவைத் தவிர எனக்கு வேறு நினைவுகள்

இல்லை. அவையெல்லாம் தேய்ந்து தேய்ந்து அணுவாய்க் கூட இல்லாமல் மறைந்துவிட்டன. உனது விருப்பை நான் ஏற்கிறேன். கவிதா பொறியியலாளர். அவள் தனது வாழ்க்கையைத் தீர்மானிக்கட்டும். உன் மீது வைக்கும் பக்தியால் வாழவேண்டும் என்ற ஆசை ஒழிகிறது. மாயாகாரியங்களாகிய காலதேச வர்த்தமானங்களாக நீ பர்ணமிக்கவில்லை. அவைகள் எனக்குப் புலப்படுகின்றன. இது ஞானிகளுக்கும் மெய்யடியார்க்கும் தான் புரியும். மற்றவர்கள் அவ்வளவு தான். கற்றாலும் அது புரியாது. எல்லாம் தெரிந்ததாகவும், எதிர்காலத்தைத் தாம் உணர்வதாகவும் கருதுவது. இப்போ காலநிலையை அவதானித்துக் கூறும் நிலையங்கள் அழிவு வந்த பின்பு தான் மழையைப் பற்றியும், புயலைப் பற்றியும் கூறுகின்றனர். ஆனால் ஞானிகள் அவை பற்றி ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிவிட்டனர். எல்லாம் உன் செயல் என்று நினைத்தால் சிந்திப்பதற்கு எதுவும் இல்லை" என்று நினைத்தார் கதிரேசன்.

**பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்**
**பரந்ததோர் படரொளிப் பரப்பே**
**நீருறு தீயே நினைவதேல் அரிய**
**நின்மலா நின்னருள் வெள்ளச்**
**சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே**
**திருப்பெருந்துறையுறை சிவனே**
**ஆருற வெனக்கிய காரய னுள்ளார்**
**ஆனந்தம் ஆக்குமென் சோதி.** **08**

கதிரேசன் சிவனை வணங்கிவிட்டுத் திரும்பியபோது முன்னால் மகேசன் நின்றான். மகனே, இந்த உலகிலும், அண்டங்கள் அனைத்திலும் ஓர் ஒளியாகப் படர்ந்திருக்கும் சிவன் யாரின் உள்ளத்தில் இருக்கிறானோ, அவ்வுள்ளம் தேனாக இனிக்கும். எந்தப் பிரச்சினைகள் வந்தாலும் அது கலங்காது. உலகே அழிந்தாலும் அது கவலைப்படாது. அனைத்தும் சிவசொரூபம். சிவனின் அருளைப் பெற்றவர்களுக்கு உற்றாரும் இல்லை, வேற்றாரும் இல்லை. எல்லோரும் சிவனடியார்கள் என்ற நினைப்புத்தான் வரும். அவர்களுக்கு மகிழ்வும் இல்லை. வெறுப்பும் இல்லை. இதை உணராதவர்களுக்கு உணர்த்த முடியாது. கவிதா சிவனை வணங்குகிறாளே தவிர அவளது மனம் முழுமையாகச் சிவனை நம்பவில்லை. அதனால் எதிர்காலத்தை நினைத்துக் கவலைப்படுகிறாள். நீ பிற்காலத்தில் மனம் மாறிவிட்டால் தனது வாழ்க்கை

நரகமாகிவிடும் என்று நினைக்கிறாள். ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பவனை எழுப்பலாம். உறக்கம் போல் இருப்பவனை எழுப்ப முடியுமா... என்ன? அவளுக்கு உன்னிலோ, என்னிலோ இல்லைச் சிவனிலோ நம்பிக்கை இல்லை. நம்பாதவர்களை நம்பவைக்க முடியாது. நான் என்ன செய்வது. சிவனிடம் முறையிட்டுள்ளேன்" என்றார் கதிரேசன்.

**சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்**

**ஒருவனே சொல்லுதற் கரிய**

**ஆதியே நடுவே அந்தமே பந்தம்**

**அறுக்கும் ஆனந்தமா கடலே**

**தீதிலா நன்மைத் திருவருட்குன்றே**

**திருப்பெருந்துறையுறை சிவனே**

**யாதுநீ போவதோர் வகையெனக்கருளாய்**

**வந்துநின் இணையடி தந்தே. 09**

மகேசன் சிரித்தான். "ஐயா, சிவன் சோதியாகத் தோன்றும் உருவினன். ஆதி அந்தம் நடுவு எல்லாம் அவன். மகிழ்வால் மகிழ்வை அறுக்கும் இயல்புடையவன். ஆனந்தமானவன். திருவருளால் அனைவருக்கும் அருள்பவன். அவன் தனது திருவடியை மெய்யடியார்க்குக் கொடுத்தருள்வான். அவனும் உயிரும் பிரிந்திருப்பதில்லை. அதனால் அவனுக்கு யாவும் தெரியும். அத்துடன் அவனுள் இருக்கும் உயிருக்கு அவன்மீது நம்பிக்கை இருக்கும். நம்பிக்கைதான் வாழ்க்கை. நம்பிக்கையில்லாதவர்களுடன் வாழ்வது பிணத்துடன் கூடி வாழ்வதைப் போன்றது. சிவன் தான் எனது உள்ளத்தில் அவளைப் புகுத்தினான் என்று நினைத்தேன். அவளும் அப்படி நினைத்திருந்தால் மனது மாறுபாடு அடைந்திருக்காது. அவளை அப்படியே விட்டுவிடுங்கள். சிவன்மீது அவள் நம்பிக்கை கொண்டானேயானால் என்மீதும் கொள்வாள். எல்லாம் சிவனது செயலென நம்பும் சிவனடியவன் நான். சிவனின் சித்தப்படி நடக்கட்டும்" என்றான் மகேசன்.

**தந்ததுன் தன்னைக் கொண்டதென் றன்னைச்**

**சங்கரா ஆர்கொலோ சதுரர்**

**அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்**

**யாதுநீ பெற்றதொன் றென்பால்**

**சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்**

**திருப்பெருந்துறையுறை சிவனே**

**எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்**

**யான் இதற் கிலன்ஓர்கைம் மாறே. 10**

அப்போது அங்கே கவிதா வந்தாள், “தாத்தா, சங்கரனான சிவனின் மீது நம்பிக்கையில்லாததால்தான் நான் எனது வாழ்க்கையைப் பற்றிப் பயந்தேன். அவனை நம்பினேன். எது வந்தாலும் அவன் என்னைக் காப்பாற்றுவான் என்ற நினைவு எனக்கு வந்தது. அதனால் முடிவில்லாத ஆனந்தம் கிடைத்தது. அது எனது சிந்தையில் கோவில் கொண்டிருக்கும் எம்பெருமானான சிவபெருமானால்தான் கிடைத்தது. மாணிக்கவாசகரின் திருவாசகத்தை எடுத்துப் பலமுறை படித்த பின்பு எனது மனதில் இருந்த பயம் நீங்கிவிட்டது. ஜீவவியத்தி வெறும் கற்பனை என்று உங்களைப் போன்ற அனுபூதிமான்களுக்குத் தான் விளங்கும். என்போன்றவர்களுக்கு விளங்கமாட்டாது. புரியவும் மாட்டாது. யான் எனது என்ற பொய்யான ஜீவபேதம் தேய, அது இருந்த இடத்தில் மெய்யான சிவசொரூபம் வந்து சேரும் என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அதை வாசித்த பின் நான் எடுக்கும் முடிவு எனது முடிவாகவே இருக்கும். அதை அகற்றிவிட்டுச் சிவனைத் தொழுது நம்பிக்கை வைத்தால் எந்த முடிவை எடுக்க வேண்டும் என்று சிவன் முடிவெடுப்பான். அம்முடிவு மெய்யடியார்கள் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்படும். அதனால் தான் வாழ்க்கையில் எதையும் விரும்பாத நீங்கள் எனது முடிவை உறுதியாக எடுத்தீர்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்” என்றாள் கவிதா.

“மிக்க மகிழ்ச்சியம்மா. சிவனின் அருளால் உன்னை விரும்பிய மகேசன் உனது முடிவை அறிந்து விட்டான். எல்லாம் சிவன் செயல். நான் உனது தந்தையுடனும் மகேசனது தந்தையுடனும் கதைத்து ஆவன செய்கிறேன் என்றார் கதிரேசன்.

கவிதா மெதுவாகத் தலையைத் தூக்கி மகேசனைப் பார்த்தாள். அவன் தன்னை ஆட்கொள்ள வந்த சிவன் என நினைத்து அவனது பாதத்தை தனது கைகளால் பிடித்து விம்மி விம்மி அழுதாள். “அழாதை கவிதா, எல்லாம் சிவன் செயல்” என்றான் மகேசன்.

திருச்சிற்றம்பலம்.